[redacted]



# தமிழ்மொழி

## தொடக்கநிலை 4

# மதிப்பீட்டுத் திட்டம்

## 2017

## சீடார் தொடக்கப்பள்ளி

# மொழிக்கூறுகள்

1. கேட்டல் 10
2. பேசுதல் 20
3. வாசித்தல் 10
4. எழுதுதல் 60

- கட்டுரை – 15
- மொழி (தாள் 2) – 45



# கேட்டல்



## பனுவல் 1

மீனவன் ஒருவன் ஆற்றில் வலையை வீசினான்.அப்போது ஒரு தேவதை வலையில் அகப்பட்டுக்கொண்டது. தேவதை தன்னை விடுவித்து விடுமாறு மீனவனை வேண்டியது.அவ்வாறு விடுவித்தால், அவன் விரும்பியதெல்லாம் கொடுப்பதாக உறுதியளித்தது. மீனவன் தேவதையை விடுவித்தான். தேவதை மகிழ்ச்சி அடைந்தது.வீடு திரும்பிய மீனவன் தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். அவனுடைய மனைவி தேவதையிடம் நிறைய வரங்களைப் பெற்று வரச் சொன்னாள்.

1) மீனவன் தேவதையை எதனால் விடுவித்தான்?

1. தேவதை அவனுக்கு நல்லது செய்வதாகக் கூறியதால்
2. தேவதை அவன் விரும்பியதைக் கொடுப்பதாகக் கூறியதால்
3. தேவதை மீனவனிடம் மன்றாடியதால்

2) எது தேவதைக்கு ஆனந்தத்தைத் தந்தது ?

1. மீனவனுக்கு வரம் அளித்தது
2. மீனவனிடமிருந்து விடுதலை பெற்றது
3. மீனவன் நடந்ததைத் தன் மனைவிடம் கூறியது

**<u>எதிருரைப் பனுவல்</u>**

கவிதா : அம்மா நம்ம வீட்டுக்குப் பக்கத்திலே சந்தை ஆரம்பித்துவிட்டாங்க! அங்கே போக எனக்கு ஆசையாக இருக்கிறது. வர சனிக்கிழமை நம்ம குடும்பத்தோட அங்கே போகலாமா?

அம்மா,........

1) அப்படியா! புறப்படு போகலாம்.
2) அப்படியா! கண்டிப்பாகப் போகலாம்.
3) அப்படியா! எத்தனை மணிக்குப் போவாய் ?

# வாசித்தல்



பாலன் ஓர் ஏழைச் சிறுவன். ஆனால் அவன் மிகவும் நல்ல பையன். அவன் எல்லாரிடமும் அன்புடன் பழகுவான்; எல்லாருக்கும் தயங்காமல் உதவி செய்வான். ஒரு நாள் அவனுக்குப் பசி எடுத்தது. ஆனால் சாப்பிட உணவு எதுவும் இல்லை. தெருவில் போகும் எல்லாரிடமும் கேட்டுப் பார்த்தான். யாரும் அவனுக்கு உதவி செய்யவில்லை. பாலன் ஒரு மரத்தின் அடியில் படுத்துக்கொண்டான். பசிமயக்கத்தில் அவன் தூங்கிவிட்டான்.

திடீரென்று ஓர் அலறல் சத்தம் கேட்டது. அவன் கண் விழித்தான். ஒரு பெரியவரை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அவர் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்தார். பாலன் உடனே அவர் அருகில் சென்றான். அவன் அவருக்கு முதலுதவி அளித்தான்.

# பேசுதல்

1) ஒளிக்காட்சியில் நீ பார்த்த ஒரு நல்ல செயலைப் பற்றி கூறு ?

2) ஒளிக்காட்சியில் இடம்பெறாத நல்ல செயல் ஒன்றினை ஒருவர் உனக்குச் செய்தார்.அதனைப் பற்றிக் கூறு.



# எழுதுதல்



# மொழி ( தாள் 1 ) 15(மதிப்பெண்கள்) 40 நிமிடங்கள்

- கருத்து ( 8 மதிப்பெண்கள் )
- மொழி ( 7 மதிப்பெண்கள் )



# மொழி ( தாள் 2 ) 45(மதிப்பெண்கள்)

- வேற்றுமை
- செய்யுள்
- தெரிவுவிடைக் கருத்தறிதல்
- முன்னுணர்வுக் கருத்தறிதல்
- சுயவிடைக் கருத்தறிதல்



**வேற்றுமை**

1) இளமதியும் மலர்விழியும் ஒரு நடன __________ சேர்ந்து பயிற்சி பெற்றனர்.

1. பள்ளியை
2. பள்ளியுடன்
3. பள்ளியில்
4. பள்ளிக்கு ( )

2) நடன ____________ இருவரும் நன்றி கூறினர்.

. 1. ஆசிரியரால்
2. ஆசிரியர்
3. ஆசிரியரின்
4. ஆசிரியருக்கு ( )

## செய்யுள்

1. உடையது __________

1) கைவிடேல்
2) விளம்பேல்
3) விலக்கேல்
4) கரவேல் (        )

2. தேடாது அழிக்கின் __________ முடியும்

1) போராய்
2) காயாய்
3) பாடாய்
4) கூராய் (        )

3. எறும்பு ஊரக் கல்லும் __________

1) மறையும்
2) தேயும்
3) விரியும்
4) கரையும் (        )



## தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பகுதியைக் கவனமாகப் படி.**

திரு குமார் தன் குடும்பத்துடன் அடுக்குமாடி வீட்டில் வசித்து வருகிறார்.அவரது அண்டை வீட்டில் வாழும் திரு லிம் மிகவும் நல்லவர்.ஒருநாள் திரு குமாரின் மகனுக்குத் திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டது.அவர் தன் மகனை உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

மருத்துவர் அவனைப் பரிசோதித்து அவனுக்கு இருதய நோய் இருப்பதாகக் கூறினார்.மேலும் அவனுக்கு விரைவில் அறுவைச் சிகிச்சை செய்வது நல்லது என்றும் கூறிவிட்டார்.ஆனால் அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் போதுமான பணம் திரு குமாரிடம் இல்லை.அதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் அவர் தவித்தார்.

# கேள்விகள்

1. திரு குமார் எங்கு வசித்து வந்தார் ?

1) தனியாக அடுக்குமாடி வீட்டில்
2) குடும்பத்துடன் அடுக்குமாடி வீட்டில்
3) தன் மகனுடன் மட்டும் அடுக்குமாடி வீட்டில்
4) திரு லிம்முடன் அடுக்குமாடி வீட்டில் ( )

2. திரு குமார் எதனால் மருத்துவமனைக்குச் சென்றார் ?

1)அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதால்
2)தனது மருத்துவ பரிசோதனைக்காக
3)புதல்வனுக்கு நெஞ்சு வலி உண்டானதால்
4) மகனுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக ( )

3. திரு குமார் கவலை அடைய காரணம் என்ன ?

1)தன்னால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியாததால்
2)அறுவைச் சிகிச்சை செய்ய பணம் தேவைப்பட்டதால்
3)தனக்கு அறுவைச் சிகிச்சை செய்ய பணம் இல்லாததால்
4)தனது மகனுக்கு இருதய நோய் ஏற்பட்டதால் ( )



13) கழுகு நரியிடம் கூறிய பதிலை விளக்கி உன் நண்பன் ரவிக்கு ஒரு குறிப்பு எழுது.( 4 ம)

அன்புள்ள ரவி,

கழுகு நரியைப் பார்த்தது. அது நரியிடம்

இப்படிக்கு,

உன் நண்பன்

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

ஒரு வீட்டில் மூதாட்டி ஒருவர் தனியாக வாழ்ந்து வந்தார். அவருக்கு உதவி செய்ய யாரும் இல்லை. ஒருநாள் அவருக்குச் செலவுக்கு ________________ தேவைப்பட்டது. ________________ அவர் ஒரு வங்கிக்குச் சென்றார். தனக்கு வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு தன் வீட்டிற்கு ________________. வழியில் ஒரு திருடன் மூதாட்டியின் ______________ பணம் இருப்பதைக் கண்டான். அவன் ஓடிச் சென்று அவருடைய பணத்தை ___________________ ஓடி விட்டான். பாட்டி அங்கேயே உட்கார்ந்து அழத் தொடங்கினார்.

| | |
|---|---|
| திரும்பினார் | பணம் |
| ஆகையால் | கையில் |
| அதனால் | திருடிக்கொண்டு |

## சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

ஒரு கிராமத்தில் ஓர் ஏழையும் பணக்காரனும் வாழ்ந்து வந்தனர். பணக்காரன் பெரிய மாளிகையில் வசித்து வந்தான். ஆனால், ஏழையோ மாளிகைக்குப் பக்கத்தில் அவனுக்குச் சொந்தமான பசுவுடன் குடிசையில் வசித்து வந்தான். பணக்காரனிடம் ஏராளமான பணம் இருந்தது. தினமும் இரவில் ஆடம்பரமாக உணவு உண்பான். ஏழை தினமும் தன் பசு தரும் பாலை விற்று, அதில் வரும் வருமானத்தில் வெறும் கஞ்சி காய்ச்சிச் சாப்பிட்டான். தினமும் கஞ்சி சாப்பிட்டுச் சலித்துப் போகாமல் இருக்க, ஏழை ஓர் உத்தியைக் கடைப்பிடித்தான். ஏழை தினமும் இரவு உணவைப் பணக்காரனின் சன்னல் அருகில் அமர்ந்துதான் உண்பான். மாளிகையிலிருந்து வரும் உணவு வாசனையை முகந்து கொண்டு, “ஆஹா! பிரியாணி என்ன மணம்!”, “கோழி வறுவல் என்ன வாசனை!”, “நெய் மணம் கமகமக்கிறதே!” என்று மனதுக்குள் சொல்லியபடியே தன் கஞ்சியைச் சுவைத்து உண்பான்.

**<u>கேட்கப்பட்டு இருக்கும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.</u>**

1. எது ஆடு மேய்ப்பவனின் சிந்தனையைத் தூண்டியது ? (1)

________________________________________

________________________________________

2. ஆடு மேய்ப்பவன் எவ்வாறு சிரமப்படுகிறான்? (2)

________________________________________

________________________________________

3.ஆடு மேய்ப்பவன் எப்படி நிறைய பணம் ஈட்ட எண்ணினான்?(2)

________________________________________

________________________________________

# முக்கிய குறிப்புகள்

1)தமிழ் நூல்கள்

2)வீட்டுப்பாடம்

3)சொல்வதெழுதுதல்

4)பெற்றோர் கையொப்பம்

# நன்றி

# வணக்கம்